
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 17 2024

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 17, 2024 | ஒளி: 10 கதிர் 116 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## முட்டை விலை குறைகிறது

எதிர்வரும் பண்டிகைக் காலத்திற்காக முட்டைகள், 30 ரூபாய்க்கும் 35 ரூபாய்க்கும் சில்லறை விலையில் விற்கப்படும் என, அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதன் தலைவர் ஆண்டன் அப்புஹாமி கூறுகையில், அனைத்து சில்லறை விற்பனையாளர்களையும், நேற்று (16) முதல் முட்டையின் விலையை 35 ரூபாவுக்கு விற்பனை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், 2023ஆம் ஆண்டு பண்டிகைக் காலங்களில், முட்டையின் விலை 65-70 ரூபாவாக இருந்த போதிலும், தற்போது முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதால், விலை நிலைகள் சீரடைந்துள்ளன.



## அரிசி இறக்குமதி தாமதம்

அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, திங்கட்கிழமை(16), நாட்டுக்கு வரவிருந்த போதிலும், அது எதிர்வரும் 19ஆம் திகதி வரை தாமதமாகலாம் என, அரச வர்த்தக(பொது) கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அரிசியை இறக்குமதி செய்யும் கப்பல்களில் ஏற்பட்ட நெரிசலே இதற்குக் காரணம் என அதன் தலைவர் ரவீந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவில் இருந்து தரமான அரிசி மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை உத்தியோகபூர்வமாக வரவேற்கும் நிகழ்வு திங்கட்கிழமை (16) இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான ராஷ்டிரபதிபவனில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதியை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு செவ்வாய்க்கிழமை (17) காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஜனாதிபதியின் முதலாவது வெளிநாட்டு விஜயத்தை ஆரம்பித்து, ஞாயிற்றுக்கிழமை (15) மாலை சுமார் 5.30 மணியளவில் ஜனாதிபதி மற்றும் அவரது குழுவினர் பயணித்த விமானம் இந்தியாவின் புதுடில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தது.

அங்கு, தகவல் தொடர்புத் துறை அமைச்சர் கலாநிதி எஸ். முருகன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இராஜதந்திரிகள் குழுவினர் ஜனாதிபதியை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

அதன்பிறகு, ஜனாதிபதி, இந்திய நிதி மற்றும் நிறுவன அலுவல்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோர் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்திய இலங்கை பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பில் ஜனாதிபதிக்கும் இந்திய நிதி மற்றும் நிறுவன அலுவல்கள்அமைச்சர் நிர்மலா சீதா ராமனுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இலங்கைக்கு அதிகளவான இந்திய சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பது, விவசாய நவீனமயமாக்கல் மற்றும் நாட்டில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு மேம்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## "அச்சமின்றி சாப்பிடுங்கள்"

சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அரிசியை மக்கள் அச்சமின்றி உட்கொள்ளுமாறு, சுங்க திணைக்கள பேச்சாளரும் சுங்கப் பணிப்பாளர் நாயகமுமான சிவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

தனியார்த் துறையினரால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கொள்கலன்களில், மூன்று கொள்கலன்களில் பொருத்தமற்ற அரிசி காணப்பட்ட போதிலும், சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட ஏனைய அரிசிகளில் எவ்வித பிரச்சினையும் இல்லை என உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் உறுதிப்படுத்தியதாக, அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



### வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த

## அருச்சுனா உட்பட இருவருக்கு பிணை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்தமை தொடர்பிலான வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அருச்சுனா இராமநாதன் மற்றும் சட்டத்தரணி என்.கௌசல்யா ஆகியோரை தலா ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

தொடர்ச்சி P2



## CID இல் ஆஜராகாத யோஷித

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தரான மேஜர் நெவில் வன்னியாராச்சி திங்கட்கிழமை (16) ஆகியோரை விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு விடுத்திருந்தனர்.

எவ்வாறாயினும், அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் CID திணைக்களத்தில் முன்னிலையாகி, யோஷித ராஜபக்ச தற்போது வெளிநாட்டுப் பயணத்தில் உள்ளதாகவும், நெவில் வன்னியாராச்சி தனிப்பட்ட பயணத்தில் இருப்பதாலும் இன்று வருகை தருவது கடினம் என அறிவித்துள்ளனர்.

பண தூய்தாக்கல் (Money Laundering) தொடர்பான சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் விசாரணை தொடர்பில் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காகவே இவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### சபாநாயகரை நியமிப்பது

## "முதலாவது கூட்டத்திலேயே பொருத்தமானது"

நிலையியற் கட்டளைச் சட்டங்களின் பிரகாரம், பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்திலேயே சபாநாயகரை நியமிப்பதே பொருத்தமானது என, சட்டத்தரணி கலாநிதி பிரதிபா மஹாநாம தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு; தொடர்ந்தும் விளக்கமறியல்



ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட லங்கா T10 சுப்பர் லீக் தொடரின் காலி மார்வெல்ஸ் அணியின் உரிமையாளரான இந்தியப் பிரஜை பிரேம் தக்கரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கண்டி, பல்லேகலயில் நடைபெற்று வரும் லங்கா T10 சுப்பர் லீக் கிரிக்கட் போட்டியில் தனது அணியின் வீரர் ஒருவருக்கு ஆட்ட நிர்ணய ஆலோசனை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே முன்னிலையில் திங்கட்கிழமை (16) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, இந்தக் குற்றம் தொடர்பாக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 127வது பிரிவின் கீழ் இரகசிய வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்கு

தொடர்ச்சி P2

## நீதியமைச்சர் CID இல் முறைப்பாடு

பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பொய்யான தரவுகள் பதிவேற்றப்பட்டமை தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் திங்கட்கிழமை (16) முறைப்பாடு செய்துள்ளார்.

தமக்கு அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் அல்லது தனது அரசியல் மீதான நம்பிக்கையை உடைக்கும் நோக்கில் எவரேனும் பொய்யான தகவல்களை உள்ளீடு செய்துள்ளனரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஊடகங்களிடம் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மைத்திரி உரிமை கோர மாட்டார்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்கு எதிர்காலத்தில் எந்த உரிமையும் கோரப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணி ஊடாக திங்கட்கிழமை(16) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவி தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அவமதித்ததாகக் கூறி தனது

தொடர்ச்சி P2

### வன்புணர்வுக்குள்ளான

## சிறுமி பலி; நபர் கைது

எஸ்.ஆர்.லெம்பேட்

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 10 வயது சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 55 வயதுடைய நபர் தப்பிச் சென்ற நிலையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டு திங்கட்கிழமை(16) மன்னார் நீதிமன்றத்தில் முன்னிறுத்திய போது நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## மின் கட்டண திருத்தம் இன்று...

மின்சாரக் கட்டணத் திருத்த யோசனைக்கான பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமை (17) முதல் ஆரம்பிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி 08ஆம் திகதி வரை இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கருத்துக்களை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 6ஆவது தளம், இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம், கொழும்பு-03 என்ற முகவரி அல்லது info@pucsl.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாகவும் பொது மக்கள் அனுப்பலாம்

அத்துடன், 076 42 710 30 என்ற வட்ஸ்அப் எண்ணிலும் நீங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் சமர்ப்பிக்கலாம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



## அருச்சுனா உட்பட இருவருக்கு பிணை

**அனுமதி இன்றி அத்துமீறி நுழைத்தல், முறைப்பாட்டாளருக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என சந்தேக நபர்களுக்கு அறிவுறுத்திய நீதவான், சந்தேக நபர்களை தலா ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார்**

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அருச்சுனா மற்றும் சட்டத்தரணி என்.கௌசல்யா ஆகியோர் அத்துமீறி நுழைந்து வைத்தியர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர். குறித்த வழக்கு திங்கட்கிழமை (16) யாழ். நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றம் சாட்டப்பட்ட வைத்தியர் மற்றும் சட்டத்தரணி ஆகிய இருவரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, வைத்தியசாலைக்குள் பணிப்பாளரின் அனுமதி இன்றி அத்துமீறி நுழைத்தல், முறைப்பாட்டாளருக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என சந்தேக நபர்களுக்கு அறிவுறுத்திய நீதவான் , சந்தேக நபர்களை தலா ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார்.

குறித்த வழக்கினை மேற்கொண்டு நடத்துவது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனைகளைப் பெறுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்திய நீதவான், வழக்கினை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## “முதலாவது கூட்டத்திலேயே பொருத்தமானது”

பாராளுமன்றத்தின் எதிர்கால பணிகளை முன்னெடுப்பதற்குப் பிரதி சபாநாயகருக்குத் திறமை இருந்தாலும், பாராளுமன்றத்தில் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகளை வழங்குவதற்குச் சபாநாயகர் ஒருவர் இன்றியமையாதது எனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

அசோக ரன்வல சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்தாலும், அவரது பாராளுமன்ற பதவியில் பிரச்சினை ஏற்படாது என பிரதிபா மஹாநாம மேலும் கூறியுள்ளார்.

## தமிழரசு கட்சியின் தலைவர் யார்?

தமிழரசுக் கட்சியின் தலைவர் விவகாரம் தொடர்பாக எதிர்வரும் 28 ஆம் திகதி தீர்க்கமான முடிவு எட்டப்படுமென எதிர்பார்ப்பதாக, இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் நடைபெறவுள்ள இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது இந்த தீர்மானம் எட்டப்படுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் சனிக்கிழமை(14) வவுனியாவில் நடைபெற்றபோது, கூட்டத்தைத் தலைமை தாங்குபவர் தொடர்பாக அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

நீண்ட நேரக் கருத்தாடல்களின் பின்னர், மாவை சேனாதிராஜாவின் பதவி விலகலை மீளப்பெற அனுமதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பாக அடுத்த கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அன்றைய தினம் நடைபெறவுள்ள இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது இந்த தீர்மானம் எட்டப்படுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்**



# ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இடையேயான சந்திப்பில், இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியாவின் மிகப்பெரிய சந்தையைப் பயன்படுத்திக்கொள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மீன் பிடித்துறை மற்றும் தேசிய ஒற்றுமை மேம்பாடு உள்ளிட்ட இருநாடுகளுக்கும் அன்னியோன்னியமான விடயங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அதனையடுத்து இந்திய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவால் (Shri Ajith Doval) ஜனாதிபதியைச் சந்தித்து வலயத்தின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடினார்.

இதற்கிடையில், திங்கட்கிழமை (16) ஜனாதிபதியை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிக்குப் பிறகு, ராஜ்கோட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் அவர் மரியாதை செலுத்த உள்ளார்.

பின்னர் ஜனாதிபதி மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் இல்லத்தில் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், அங்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், இருதரப்பு கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டு ஊடக அறிக்கை வெளியீடு இடம்பெறவுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி மற்றும் இந்திய துணை ஜனாதிபதிக்கு இடையிலான சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை (17) பிற்பகல் நடைபெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பின்னர் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை ராஷ்டிரபதிபவனில் இடம்பெறவுள்ளது.

## நீதியமைச்சர் CID இல் முறைப்பாடு

அண்மையில் பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் ‘கலாநிதி ஹர்ஷன நாணயக்கார’ என பதிவிடப்பட்டிருந்தமை தொடர்பில் அமைச்சரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அது திருத்தப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பெயர்களை பதிவேற்றியதில் தவறு இருப்பதாக பாராளுமன்ற தலைமைச் செயலகம் கடிதம் அனுப்பியதாகவும் நீதி அமைச்சர் இதன்போது கூறியுள்ளார்.

எனினும், இது குறித்து தற்போது குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக நீதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 4 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த மண்சரிவு அபாய எச்சரிக்கை திங்கட்கிழமை(16) மாலை 4.00 மணி முதல் இன்று செவ்வாய்க்கிழமை(17) மாலை 4.00 மணி வரை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் பின்வருவமாறு

பதுளை மாவட்டத்தின் ஹப்புத்தளை, ஹாலிஎல, பசறை, எல்ல பகுதிகளிலும், கண்டி மாவட்டத்தின் மெததும்பர, பாததும்பர பகுதிகளிலும், குருணாகல் மாவட்டத்தின் ரிதிகம பகுதியிலும், மாத்தளை மாவட்டத்தின் இரத்தோட்டை, அம்பன்கங்கை கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## போலி செய்தி தொடர்பில் தெளிவூட்டல்

ஜனாதிபதி அன்பளிப்பு’ எனும் பெயரிலான தலைப்பில் அரசாங்கத்தின் உதவி வேலைத்திட்டம் தொடர்பில் போலி செய்தியொன்று தற்போது சமூக ஊடகங்கள் வாயிலாக பரவிவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறித்த செய்தி முற்றிலும் பொய்யென்பதுடன் அரசாங்கம் இவ்வாறான வேலைத்திட்டம் தொடர்பில் தீர்மானம் எடுத்திருந்தால், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் கலந்துரையாடலில் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களுக்கு குறித்த முடிவுகளை அரசாங்கம் தெரிவிப்பது செயன்முறையாக உள்ளது.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தெளிவூட்டல் பின்வருமாறு:

‘ஜனாதிபதி அன்பளிப்பு’ எனும் பெயரிலான தலைப்பில் அரசாங்கத்தின் உதவி வேலைத்திட்டம் தொடர்பில் போலி செய்தியொன்று தற்போது சமூக ஊடகங்கள் வாயிலாக பரவிவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறு என குறிப்பிட்டு குறித்த செய்தியுடன் போலி இணைப்பு (Link) குறிப்பிடப்பட்டும் உள்ளது.

குறித்த செய்தி முற்றிலும் பொய்யென்பதுடன் அரசாங்கம் இவ்வாறான வேலைத்திட்டம் தொடர்பில் தீர்மானம் எடுத்திருந்தால். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் கலந்துரையாடலில் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களுக்கு குறித்த முடிவுகளை அரசாங்கம் தெரிவிப்பது செயன்முறையாக உள்ளது.

அவ்வாறான ஏற்றுக்கொள்ளக்கூடிய முறைமையின் ஊடாக அரசாங்கத்தினால் அறிவித்தல் செய்யப்படாத அரச கொள்கை மற்றும் முடிவுகள் தொடர்பில் இவ்வாறான பொய்யான செய்திகளை செய்வதிலிருந்து தவிர்ந்து பிரசாரம் கொள்ளுமாறு சமூக செயற்பாட்டாளர்களிடம் தயவாய் வேண்டிக்கொள்வதுடன், அடிப்படையின்றி ஊடக பொய்யான செய்திகளை ஏற்றுக்கொள்தல் மற்றும் பரிமாறிக்கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

## “அச்சமின்றி சாப்பிடுங்கள்”

எனவே, சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அரிசியை மக்கள் அச்சமின்றி உட்கொள்ளுமாறு, அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து இறக்குமதியாளர்களும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அரிசி இறக்குமதி பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதன் பின்னர் அரிசி இறக்குமதி பணிகளை மேற்கொள்ள முடியாது எனவும், அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு...

சம்மதம் தெரிவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி உரிய இரகசிய வாக்கு மூலத்தைப் பதிவு செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் அதுவரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிடப் பட்டுள்ளது.

## மின் கட்டண...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுக்கு வருகை தந்தோ அல்லது மாகாண மட்டத்தினால் ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றோ கருத்துக்களைச் சமர்ப்பிக்க முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

புதிய வருடத்தில் முதல் ஆறு மாதங்களுக்கு மின் கட்டணத்தைத் திருத்தம் செய்யாமல் பராமரிக்க வேண்டும் என மின்சார சபை பரிந்துரைத்திருந்தது.

இதன்படி, குறித்த யோசனையை ஆணைக்குழுவால் மீளாய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் கருத்துக்களுக்காக முன்மொழிவு அடங்கிய வரைவு காட்சிப்படுத்தப்படும்.

இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்த யோசனை தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஜனவரி மாதம் 17ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## மைத்திரி உரிமை...

கட்சிக்காரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு மனுவுக்குத் தீர்வு காணக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்குத் தனது கட்சிக்காரர் உரிமை கோர மாட்டார் என அவர் நீதிமன்றத்திற்கு உறுதியளித்தார்.

2024 ஏப்ரல் 24ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை மீறியதாகக் கூறி, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக மைத்திரிபால சிறிசேனவை தண்டிக்க உத்தரவிடுமாறு கோரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர் மொன்டேக் சரத்சந்திர இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

நீதிமன்ற அவமதிப்பு மனு நீதியரசர் (ஜனாதிபதி) நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் சஷி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன இந்த விடயத்தைத் தீர்க்க முடியும் என மீண்டும் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்கான கோரிக்கையை மைத்திரிபால தொடர மாட்டார் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி சாந்த ஜயவர்தன, இந்த தீர்வை அங்கீகரித்ததுடன், நீதிமன்ற அவமதிப்பு மனுவை வாபஸ் பெறுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுத்து 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

## சிறுமி பலி; நபர் கைது



சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், தப்பிச் சென்ற குறித்த நபர் ஞாயிற்றுக்கிழமை (15) திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். தலைமன்னார் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளின் பின்னர் திங்கட்கிழமை (16) காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தி பின்னர் திங்கட்கிழமை (16) காலை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிறுத்தினர்.

இதன் போது, விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கல்வி தகைமையில் மோசடி

# நாமல் மீது புகார்



சட்டம் தொடர்பான தனது உயர்நிலை கல்வித் தகைமையை மோசடியான முறையில் பெற்றுக்கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மீது குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் திங்கட்கிழமை (16) புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் தொடர்பான அதிகார சபையின் தலைவர் ஜமுனி காமந்ர துஷாரவினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் மேற்படி புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜமுனி காமந்ர,

“பரீட்சை தினத்தன்று நாமல் ராஜபக்ஷ மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக அன்றைய தினம் பரீட்சை கடமையில் இருந்த மண்டபத் தலைவர், சட்டக்கல்லூரி அதிபர், பதிவாளர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் நாமல் ராஜபக்ஷவுடன் பரீட்சைக்குத் தோற்றிய இளைஞர் ஒருவர் முறைப்பாடு செய்தார்.

அவர்கள் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டனர். எனினும், இது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத்தால் தான் நீதியமைச்சின் அப்போதைய செயலாளர் சுஹத கம்லத்திடம் சென்றதாகவும், ஆனால், அவர் இந்த முறைப்பாட்டைக் கவனத்தில் கொள்ள மறுத்ததாகவும் தெரிய வருகிறது.

அதன் பின்னர் அப்போதைய வாழைத்தோட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அனைத்து திணைக்களங்களுக்கும் சென்று புகார் அளித்தார்.

இதன் பின்னர் குறித்த இளைஞன் தமது பாதுகாப்பு கருதி நாட்டை விட்டுச் சென்றுவிட்டார்.

இதனால் சாட்சியங்களைப் பெற்று முறையான விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளேன்” என்றார்.

# சிறந்த ஊடகவியலாளர் விருது கஜிந்தனுக்கு



சுயாதீன ஊடகவியலாளரான புவனேஸ்வரன் கஜிந்தன் சூழலியல், சுகாதாரம் சிறந்த ஊடகவியலாளர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த தேசிய விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை(21) காலை லேக் கவுஸ் (lake house Auditorium) அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விசேட ஆளுமை, சிறந்த கவிஞர், சிறந்த சிறுகதையாளர், சிறந்த நாவல், சிறந்த திறனாய்வாளர், சிறந்த சிறுவர் பாடலாக்கம், சூழலியல் - சுகாதாரம் சிறந்த ஊடகவியலாளர் உள்ளிட்ட 7 துறைகளில் விருது வழங்கப்படவுள்ளது.

இந்த விருதுகளுக்காக விண்ணப்பித்தவர்களில் தகுதி பெற்றோர் சிறந்த நடுவர்கள் குழாம் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

■ பு.கஜிந்தன்

சூரிய நிறுவகத்தின் நடத்தப்படும், இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியை பூர்த்தி செய்த யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (15) அன்று யாழ்ப்பாணம் - சுதுமலை பகுதியில் அமைந்துள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

மாலை அணிவிக்கப்பட்டு விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து, விருந்தினர்களின் உரைகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள், சான்றிதழ் வழங்கல், விருது வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

சூரிய நிறுவகத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் தே.பிரேமராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஒலிவர் ப்ராஷும், பாராளுமன்ற முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவும், சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் நவின் திஸாநாயக்கவும், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனும் கலந்து சிறப்பித்ததுடன், இதில் ஏனைய விருந்தினர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலரும் கலந்து கொண்டனர்.








# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

அனுராதபுரம் - விளச்சிய வீதி லோலுகஸ்வெவ பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(15) அன்று இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பலத்த காயங்களுக்குள்ளான மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டள்ளதுடன், மோட்டார் சைக்கிளின் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் லோலுகஸ்வெவ, அனுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட 62 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.















# கலாச்சார வாகன ஊர்தி மற்றும் நடை பயணம்

■ பு.கஜிந்தன்

வடமாகாண சுற்றுலா பணியகம் மற்றும் வடமாகாண அமைச்சின் எற்பாட்டில், “சுற்றுலாவினை மேம்படுத்தி எதிர்காலத்தில் மாற்றத்தினை உருவாக்குவோம்” என்னும் கருப்பொருளில் உலக சுற்றுலா தின கலை கலாசார வாகன ஊர்தி மற்றும் நடை பயண நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (15 ) மாலை யாழ். பொது நூலக முன்றலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் இதனை ஆரம்பித்து வைத்தார்.

இந்த வாகன ஊர்தி, நடை பயணம் யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமாகி அங்கிருந்து, யாழ். போதனா வைத்தியசாலை வீதி, கே.கே.எஸ். வீதி ஊடாக சென்று யாழ்ப்பாணம் பண்ணை சுற்று வட்ட பகுதியில் இனிதே நிறைவடைந்தது.

கலாசார நிகழ்வுகளான மேளதாள, நாஸ்வர இசைகள், சிறுவர் நடனங்கள், கோலாட்டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. மேலும் வாகன பவனியில் 1968 தொடக்கம் 2001ஆம் ஆண்டு காலப்பகுதி வரையான கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மாதிரி புகையிரத வண்டி என்பன ஈடுபட்டன.

இதில் முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், வடமாகாண சுற்றுலா பணியகம், வடமாகாண அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# வன விலங்குகளுக்கு உணவளித்தல் உயிருக்கே ஆபத்தானது

சமூக வலைத்தளங்களில் சில வீடியோக்களை பார்க்கும் போது, இப்படி எல்லாம் படம் பிடிக்கலாமா? என்று எண்ணத்தோன்றும். எனினும், வன விலங்குகளின் அழகைக் கச்சிதமாகப் படம்பிடிப்பது மட்டுமல்ல, அதைத் தாண்டி வன உயிரினங்கள் பற்றி நமக்கு அடிப்படை விழிப்புணர்வை சில வீடியோக்கள் ஏற்படுத்தி விடுகின்றன.

வனங்களை ஊடறுத்து அமைக்கப்படும் வீதிகளில், யானை, சிறுத்தை, மான், காட்டெருமை, காட்டுப்பன்றிகள், உள்ளிட்ட பல விலங்குகளும் வீதியைக் கடக்கப் பழகிக் கொண்டுள்ளன. எனினும், அவ்வழியாகச் செல்லும் பயணிகள் தான், அவற்றுக்குத் தொந்தரவு கொடுத்துச் சிக்கிக் கொள்கின்றன.

வனவிலங்குகள், ஊர்களுக்கு வீதிகளுக்கும் வருவதற்கு மனிதர்களே பிரதான காரணமாக அமைந்து விடுகிறார்கள். வனவிலங்குகளின் வாழ்விடங்களை அழித்தால், அவற்றால் என்னதான் செய்ய முடியும். நமது நாட்டை பொறுத்தவரையில், குரங்குகளால் தேங்காய்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், காட்டுகளைக் காப்பதற்கும், காடுகளில் மரங்களை வளர்ப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். காடுகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வோருக்கு, எந்தெந்த உயிரினங்கள் எப்பகுதியில் வாழ்கின்றது என்பது தொடர்பில் தகவல்கள் இருக்கும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு, விலங்குகளுக்கு உணவுகளைக் கொடுக்கக் கூடிய பழ, மரங்களை நாட்டுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இதனிடையே பழங்கள் தரக்கூடிய மரங்களை நடுவது இலகுவான காரியமல்ல.

அத்துடன், அதிலிருந்து மிகக்குறுகிய காலத்தில் விளைச்சலை எதிர்பார்க்க முடியாது.

நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில், முன்னெடுத்தால் மட்டுமே, எதிர்கால சந்ததியினராவது பாதுகாப்பாக இருப்பதற்கு வழி சமைக்க முடியும்.

மரங்களை நடுவதற்குப் பாடசாலை மட்டத்தில் இருந்து அறிவுறுத்தவேண்டும்.

குழந்தையின் பிறந்தநாளன்று வீட்டுத்தோட்டத்தில், பாடசாலையில் இன்றேல், கிராமத்தில் மரமொன்றை, நடுவதற்கு ஊக்குவிக்க வேண்டும். அதனை, பெற்றோர், பாடசாலை சமூகத்தினர் மட்டுமன்றி சகல துறைகளைச் சார்ந்த ஆர்வலர்களும் முன்னெடுக்கவேண்டும். அதுவே சிறந்த வழிகாட்டலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வனவிலங்குகள் வீதிகளுக்கு வருவதற்கு வீதிகளை மறிப்பதற்கும் பழகிவிட்டன

என்பதற்காக நாம் அவற்றை நம் தெருவைக் கடக்கும் நாய், பூனை போல் பாவித்தால் நிச்சயமாகத் துயரமே மிஞ்சும். அப்படியான சம்பவம் அண்மையில், இடம்பெற்றுள்ளது.

புத்தல கதிர்காமம் வீதியில் கதிர்காமம் நோக்கிப் பயணித்த லொறியை காட்டு யானை மறித்துக் கொண்டு நின்று கொண்டுள்ளது. அந்த லொறியில் இருந்து யானைக்கு வாழைப்பழம் சீப்பு கொடுக்கப்பட்டுள்ளது. லொறியில் இன்னும் உணவுகளைத் தேடியது. உணவுகள் கிடைக்காமையால், தனது தும்பிக்கையால் லொறியை புரட்டியது. லொறியின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த பெண் உடல் நசுங்கிப் பலியானார்.

" நீங்கள் வனவிலங்குகளுக்கு உணவளித்தால் அவை உங்களையே உணவாக்கலாம்.

இங்கே ஒரு யானை அப்படித்தான் ஆவேசம் காட்டியுள்ளது. வனவிலங்குகளுக்குப் பாசம் காட்டுவதாக நீங்கள் சாப்பிடும் பண்டங்களை, பானங்களை அவற்றிற்குக் கொடுக்க வேண்டாம் என்று விலங்குகள் நல ஆர்வலர்கள் எச்சரிக்கிறார்கள்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்றை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்து போன வண்ணமே உள்ளன.


வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



## மணி எத்தனை?

ஹட்டன் நகர மையத்தில் நிர்மாணிக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரம் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாகப் பழுதடைந்துள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தைப் புனரமைக்காது, இடித்துவிட்டு வேறு மணிக்கூட்டுக் கோபுரத்தை அமைப்பது தொடர்பாகப் பல தரப்பினர் தெரிவித்திருந்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், நீர்வள முகாமைத்துவ அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஒரு தொகை பணத்தை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக ஹட்டன்-டிக்கோயா மாநகர சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரங்கள் உரிய பணம் கிடைக்கும் வரை புனரமைக்கப்பட மாட்டாது எனவும், பணம் கிடைத்த பின்னர் புதிய மணிக்கூட்டுக் கோபுர நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

– சுதத் எச்.எம்.ஹேவா

# தமிழனுக்குத் தமிழனே எதிரி

மொஹமட் பாதுஷா

ரணில் விக்ரமசிங்கவின் கடந்த ஆட்சியில் அரசியலமைப்பு பேரவைக்குச் சிறிய கட்சிகள் சார்பில் தமிழ் பிரதிநிதியாக ஒருவரை நியமிக்கப் பேரினவாதக் கட்சிகள் காட்டிய எதிர்ப்பும் அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவரும் தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயரை பிரேரித்து விட்டு, அவரை நியமிக்குமாறு தமிழ் தேசியக் கட்சிகள் நடத்திய போராட்டமும் ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி கலையும் வரை சித்தார்த்தன் நியமிக்கப்படாமையும் வரலாறு.

பாராளுமன்றத்தில் சிறிய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பல சிங்களக் கட்சிகளும் இருப்பதால் தமது தரப்பிலிருந்தே ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்ய வேண்டுமெனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பி யுமான விமல் வீரவன்ச, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் எம்.பியுமான உதய கம்பன்பில ஆகிய இரு இனவாதிகள் போர்கொடி தூக்கியதை காரணமாக வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் சித்தார்த்தனை நியமிக்காது இறுதிவரை இழுத்தடித்து இறுதியில் ஆட்சியிலிருந்தே காணாமல் போயுள்ளார். அவருடன் சேர்த்து விமல் வீரவன்சவும் உதயகம்பன் பிலவும் அரசியலிலிருந்தே காணாமல் போயுள்ளனர்.

இவ்வாறான நிலையில்தான் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியில் அரசியலமைப்பு பேரவைக்குச் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான சிவஞானம் சிறீதரன் நியமிக்கப்பட்டுள்ளார். அனுரகுமார திசாநாயக்க அரசில் இது ஒரு சிறந்த மாற்றமாக இருந்தாலும், அரசியலமைப்பு பேரவைக்கு சிறீதரன் எம்.பி. தெரிவாகி விடக்கூடாது என்பதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் வாரிசான நாமல் ராஜபக்ஷவும் தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு கறுப்பு ஆடுகளும் சதி செய்த போதும் அது வெற்றியளிக்கவில்லை.

அண்மையில் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அரசியலமைப்பு பேரவையில் 10 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர் இதன் தலைவராகச் சபாநாயகர் அசோக ரன்வல செயற்படுவார். பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இதில் நிரந்தர உறுப்புரிமையை பெற்றிருப்பர். ஜனாதிபதியின் பிரதிநிதியாகத் தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பியான ஆதம்பாவா நியமிக்கப்பட்டார் எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட எம்.பியான அஜித் பி.பெரேரா நியமிக்கப்பட்டார். பிரதமரும் தனது பிரதிநிதியாக ஒருவர் நியமிக்க முடியும். பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சாராத கட்சி உறுப்பினர் ஒருவருக்கும் இடமளிக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக கட்சி சாராத மூன்று சிவில் பிரதிநிதிகளும் நியமிக்கப்படுவார்கள்.

இவ்வாறான நிலையில்தான் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக ஒருவரை தெரிவு செய்ய வேண்டியநிலையில் அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியை சேர்ந்த யாழ். மாவட்ட எம்.பியான சிவஞானம் சிறீதரனின் பெயரை அதே கட்சியைச் சேர்ந்த அம்பாறை மாவட்ட எம்.பியான கவீந்திரன் கோடீஸ்வரன் முன்மொழியத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழிமொழிந்தார்.

இதனையடுத்து, சிறீதரன் நியமிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகச் செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷவின் வாரிசான பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் எம்.பி. நாமல் ராஜபக்ஷ சிறீதரனை தோற்கடிக்க வேண்டும். அதேவேளை, மலையகத் தமிழர்களுடன் தமிழர்களை மோதவிட வேண்டும் என்ற ஒருகல்லில் இரு மாங்காய்கள் அடிக்கும் இனவாத சிந்தனையில் அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட எம்.பியுமான ஜீவன் தொண்டமானின் பெயரை முன்மொழிய ரணில் விக்ரமசிங்கவின் புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட எம்.பியான சாமர சம்பத் வழி மொழிந்தார்.

இதற்கிடையில் யாழ். மாவட்டத்தில் சுயேச்சைக் குழு 17இல் போட்டியிட்டு எம்.பியானவரும் தனது கோமாளித் தனங்களினால் பாராளுமன்றத்தில் ஒரு ஜோக்கராக பார்க்கப்படுபவருமான இராமநாதன் அர்ச்சுனா அரசியலைப்பு பேரவைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கூட்டத்திலும் விதிமுறைகள் தெரியாது வழக்கம் போலவே முட்டாள்தனமாகச் செயல்பட்டு அரசியலைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக தானும் போட்டியிடப் போவதாகக் கூறியபோதும் அவரை முன்மொழியவோ வழிமொழியவோ எவருமே இல்லாத நிலையில், அர்ச்சுனா எம்.பி. வேறு வழியின்றி போட்டியிலிருந்து தானாகவே விலகிக்கொண்டார்.

இவ்வாறான நிலையில், அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இலங்கை தமிழரசுக் கட்சியின் எம்.பியான சிறீதரனை தெரிவு செய்வதா? அல்லது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஜீவன் தொண்டமானை தெரிவு செய்வதா? என்பதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இந்த இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது, 25 எம்.பிக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த போதும் 21 எம்.பிக்கள் மட்டுமே வாக்களித்த நிலையில் சிறீதரன் எம்.பி. 11 வாக்குகளையும் ஜீவன் தொண்டமான் எம்.பி. 10 வாக்குகளையும் பெற்ற நிலையில், சிறீதரன் எம்.பி. அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய ரோஹித அபேகுணவர்தன், அனுராத ஜயரத்ன மற்றும் இரு எம்.பிக்கள் பங்கேற்கவில்லை. அதேவேளை, இந்த வாக்களிப்பில் தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இரு கறுப்பு ஆடுகள் ஜீவன் தொண்டமானுக்கு வாக்களித்துள்ளமை வெளியே கசிந்துள்ளது. அதாவது சிறீதரன் எம்.பி. தெரிவாகி விடக்கூடாது என்பதில் இந்த இரு தமிழ்த் தேசிய கறுப்பு ஆடுகளும் உறுதியாகவிருந்த நிலையில், இரு முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவுடனேயே சிறீதரன் எம்.பி. வெற்றிபெற்றார் என உள் 'வீட்டு' தகவல்கள் தெரிவித்தன.

இந்த அரசியலமைப்பு பேரவையில் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாகத் தமிழ் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அரசியலமைப்பு பேரவை என்றால் என்ன, அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் யார், அப்பேரவை ஊடாக முன்னெடுக்கப்படும் பணிகள் எவை, 21ஆவது திருத்தச் சட்டமூலத்தில் அது எந்த அடிப்படையில் உள்வாங்கப்பட்டுள்ளது என்பதை அறியப் பலரும் ஆர்வமாக இருப்பர் என்பதனால் அது தொடர்பிலும் ஒரு சிறு விளக்கம் .

அரச சேவையில், அரசியல் தலையீடுகளைத் தவிர்த்து, சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்திறக்கொள்ளும் பிரதான நோக்கிலேயே அரசியலமைப்பு பேரவை உருவாக்கப்பட்டது. அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் உள்ளடங்கியிருந்தாலும், 18ஆவது திருத்தச் சட்டம் ஊடாக அந்த ஜனநாயக ஏற்பாட்டுக்கு மஹிந்த ராஜபக்ஷவால் இறுதிக் கிரியை செய்யப்பட்டது.

இந்நிலையில், 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்ற பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்தி, பாராளுமன்றத்தின் அதிகாரத்தை மேம்படுத்துவதற்கும், நீதித்துறையின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் 19ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. அதன்மூலம் அரசியலமைப்பு பேரவையும் மீள உருவாக்கப்பட்டது. அரசியலமைப்பு பேரவையில் 10 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர் . இதன் தலைவராகச் சபாநாயகர் செயற்படுவார். பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் இதில் நிரந்தர பொறுப்புரிமையைப் பெற்றிருப்பர். ஜனாதிபதியின் பிரதிநிதியொருவரும் நியமிக்கப்படுவார் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தமது சார்பில் மேலும் இருவரின் பெயரை முன்மொழியலாம். அதற்கு மேலதிகமாக கட்சிசாராத மூன்று சிவில் பிரதிநிதிகளுக்கும் இடமளிக்கப்படும். பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சாராத சிறிய கட்சி உறுப்பினர் ஒருவருக்கு இடமளிக்க வேண்டும்.

தேசிய தேர்தல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம், ஊழல் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, தேசிய பெறுகை ஆணைக்குழு, ஆகியவற்றுக்கான உறுப்பினர்களின் பெயர்களை, அரசியலமைப்பு பேரவையே ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கும்.

அதேபோன்று, பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் மற்றும் நீதிபதிகள், சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், ஒம்புட்ஸ்மன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகிய நியமனங்கள், அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடனேயே ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும். ஜனாதிபதி தன்னிச்சையான முறையில் முடிவெடுப்பதை, அரசியலமைப்பு பேரவை என்ற இந்த ஏற்பாடு தடுத்துள்ளது. அதனாலேயே அரசியலமைப்பு பேரவையும் அதில் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாகத் தமிழ் பிரதிநிதித்துவமும் முக்கியம் பெறுகின்றது.

எனவே, மைத்திரி-ரணில் நல்லாட்சியில், அதன் பின்னரான ரணிலின் ஆட்சியில் நியமிக்கப்படமுடியாத, நியமிக்கப்பட விடாத சிறிய கட்சிகளுக்கான தமிழ் பிரதிநிதித்துவம் அனுர அரசில் கிடைத்தமை சிறந்த மாற்றமாக இருந்தாலும், அதனைத் தடுக்க தமிழ்த் தேசியம் என்ற போர்வை போர்த்திய வடக்கு, கிழக்கு கறுப்பு ஆடுகளே சதி செய்தமை தமிழனுக்குத் தமிழனே எதிரி என்பதையே மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.



## ஜனாதிபதி இந்தியா விஜயம்

# அமோக வரவேற்பு



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஞாயிற்றுக்கிழமை (15) பிற்பகல் 5.30 மணியளவில் புதுடில்லி இந்திரா காந்தி விமான நிலையத்தை சென்றடைந்தார்.

இந்தியத் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் கலாநிதி எஸ்.முருகன், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்து சமுத்திர வலயத்தின் மேலதிகச் செயலாளர் புனித் அகர்வால், இந்திய உபசரணைப் பிரதானி அன்ஷுமன் கவூர் உள்ளிட்ட இராஜதந்திரிகள் ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் சிறப்பு வரவேற்பளித்தனர்.











# அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை எனும் இந்தியாவின் கொள்கை



வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்தபோது...



நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்தபோது...



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க 3 நாள் பயணமாக ஞாயிற்றுக்கிழமை (15) இந்தியா சென்றடைந்தார்.

அவரை, டெல்லி விமான நிலையத்தில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் வரவேற்றார். இதனைத் தொடர்ந்து, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், பாதுகாப்புத்துறை ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினார்.

அண்டை நாடுகளுக்கு முதல் முன்னுரிமை எனும் இந்தியாவின் கொள்கை குறித்தும், பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி எனும் இந்தியாவின் கண்ணோட்டத்தில் இலங்கையின் குறிப்பிடத்தக்க பங்கு குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்த சந்திப்புகள் குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அனுரகுமார திசாநாயக்க, "எனது அதிகாரபூர்வ இந்திய பயணத்தில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோருடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபடும் வாய்ப்பு கிடைத்தது.

இந்திய - இலங்கை பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துதல், பிராந்திய பாதுகாப்பை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுலா மற்றும் எரிசக்தி போன்ற முக்கிய துறைகளை முன்னேற்றுதல் ஆகியவற்றில் எங்கள் உரையாடல் கவனம் செலுத்தியது.

இந்த ஈடுபாடுகள் நமது இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை ஆழப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன" என தெரிவித்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக திங்கட்கிழமை (16) குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வருகை தந்த அனுரகுமார திசாநாயக்கவுக்கு குடியரசு தலைவர் மாளிகையில் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது. குடியரசு தலைவர் திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் அவரை வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து ஒன்றிணைந்த பாதுகாப்புப் படையினரால் வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையை இலங்கை ஜனாதிபதி பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை நடத்துகிறார். இந்த பேச்சுவார்த்தையின் மூலம் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்தியாவிற்கு 3 நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க புதுடெல்லியில் உள்ள ராஜ்காட்டில் மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தினார். அவருடன் இந்திய மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் பலர் உடன் இருந்தார்.

புதுடெல்லி

‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ பிரேரணை

# தாக்கல் ஒத்தி வைப்பு

பாராளுமன்றத்தில், ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ பிரேரணை தாக்கல் செய்யப்படுவதை மத்திய அரசு தள்ளிவைத்துள்ளது.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர், கடந்த 4ஆம் திகதி தொடங்கி, வரும் 20ஆம் திகதி வரை நடைபெறும். கூட்டம் தொடங்கியதில் இருந்தே அதானி விவகாரம், சம்பல் வன்முறை, மணிப்பூர் விவகாரம் குறித்து அவையில் விவாதம் நடத்த வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.



இதற்கிடையே, ஒரே நாடு, ஒரே தேர்தல் பிரேரணைக்கு, மத்திய அமைச்சரவை கடந்த 12ஆம் திகதி ஒப்புதல் அளித்தது. பாராளுமன்றத்தில் இந்த பிரேரணை விரைவில் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், மக்களவையில் ஒரேநாடு, ஒரே தேர்தல் பிரேரணை மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், திங்கட்கிழமை (16) தாக்கல் செய்வார் என முதலில் அறிவிக்கப்பட்டது. பாராளுமன்ற நடைமுறைப்படி, எம்.பிக்களுக்கு இந்த பிரேரணைகளின் நகல் கடந்த வாரம் வழங்கப் பட்டன. இந்த நிலையில், பாராளுமன்ற அலுவல் தொடர்பாக மாற்றியமைக்கப்பட்ட பட்டியலை மக்களவை செயலகம் வெளியிட்டுள்ளது.

அதில், ‘துணை மானிய கோரிக்கைகள் குறித்து மக்களவையில், டிசெம்பர 16ஆம் திகதி விவாதிக்கப்படும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த பிரேரணைகள் மக்களவையில் திங்கட்கிழமை (16) தாக்கல் செய்யப்படாது என மத்திய அரசு வட்டாரங்கள் கூறியுள்ளன. மாறாக இந்த வார இறுதியில் தாக்கல் செய்ய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களவையின் மாற்றியமைக்கப்பட்ட அலுவல் பட்டியலை மக்களவை செயலகம் வெளியிட்டு இருந்தது. இதில் இன்றைக்கான அலுவல்களில் மேற்படி பிரேரணைகள் இடம்பெறவில்லை.

பிரேரணை தாக்கல் தள்ளிவைக்கப்பட்டதற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

உத்தரப்பிரதேசம்

இந்து மத நபருடன் பேசிய

# சிறுமிகள் மீது தாக்குதல்

உத்தரப்பிரதேச மாநிலம், சஹாரன்பூர் மாவட்டத்தில் உள்ள தியோபந்த் என்கிற பகுதியில், இந்து மதத்தை சேர்ந்த ஆண் ஒருவருடன் பேசியதாகக் கூறி, இஸ்லாமியச் சிறுமிகள் இருவரை மர்ம கும்பல் தாக்கியுள்ளது.

இதன் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலானதை அடுத்து இந்த சம்பவம் வெளிச்சத்திற்கு வந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக, 38 வயதான முகமது மெஹ்தாப் என்ற நபரை அம்மாநில பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சுமார் 16 மற்றும் 17 வயதுடைய சிறுமிகள், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரிடம் வழி கேட்டுக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அப்போது அங்கு வந்த மர்ம கும்பல் இந்து மதத்தைச் சேர்ந்த நண்பரிடம் பேசியதாகக் கூறி தாக்கியுள்ளனர். மேலும், அவர்கள் அணிந்திருந்த ஹிஜாபையும் கழட்ட வலியுறுத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இடத்தில் மக்கள் கூடியுள்ளனர்.

அப்போது, சிறுமிகள் தங்களது சகோதரரை அழைக்க, சிறுமிகள் அலைபேசி ஊடாக தொடர்புகொள்ள முயன்ற போது, அந்த கும்பல் அலைபேசியைப் பிடுங்கி எறிந்துள்ளது. மேலும், அந்த சிறுமிகள் இளைஞரிடம் பரிசு கொடுத்ததாகவும் மர்ம கும்பல் குற்றம் சாட்டியது.

இந்நிலையில், குறித்த இளைஞர் இந்து இல்லை என்று தெரிந்த பிறகுதான் மர்ம கும்பல் சிறுமிகளை விடுவித்தது. அங்கிருந்து தப்பிய சிறுமிகள் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

தமிழ்நாடு

கோவில் கருவறைக்குள் நுழைந்த

# இளையராஜா தடுத்து நிறுத்தம்

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலின் கருவறைக்குள் இளையராஜா செல்ல அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம், தற்போது பேசுபொருளாகியுள்ளது.



இசையமைப்பாளர் இளையராஜா, ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற திவ்ய பாசுரம் இசைக் கச்சேரியில் பங்கேற்றார்.

அதன் பின்னர் அங்குள்ள புகழ்பெற்ற ஆண்டாள் கோயிலில் வழிபாடு நடத்தினார். அவருக்குப் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

அப்போது ஜீயர்கள் கருவறைக்குள் சென்றபோது, இளையராஜாவும் உள்ளே சென்றார். இதைக் கண்ட ஜீயர்களும் பட்டர்களும் இளையராஜாவைக் கருவறைக்கு வெளியே நிற்குமாறு கூறினர்.

அதன் பிறகு கருவறைக்கு வெளியே சென்ற இளையராஜா, அங்கிருந்தபடியே வழிபாடு செய்தார். வரவேற்பில் விதிமீறல்கள் இருப்பதாகக் கூறி, இளையராஜா கருவறைக்குள் அனுமதிக்கப்படவில்லை என கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

ஸ்ரீவில்லுபுத்தூர் ஆண்டாள் கோவிலின் கருவறைக்குள் இளையராஜா செல்ல அனுமதி மறுக்கப்பட்டது குறித்து பல்வேறு தரப்பினரும் தங்களின் கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர்.

தென்கொரியா

தென்கொரியாவில் இடைக்கால ஆட்சி ஆரம்பம்:

# குதூகலத்தில் பொதுமக்கள்

தென்கொரியாவின் இடைக்கால ஜனாதிபதியாகப் பிரதமர் ஹான் டக்-சூவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.




தென்கொரியாவில், எதிர்க்கட்சியினர் வடகொரியாவுடன் இணைந்து பாராளுமன்றத்தை முடக்கச் சதித்திட்டம் தீட்டுவதாக, ஜனாதிபதி யூன் சுக்-இயோல் குற்றம்சாட்டி வந்தார்.

இதனையடுத்து, கடந்த 3ஆம் திகதியன்று, அங்கு இராணுவ அவசர நிலையை அறிவித்தார். அவரது இந்த முடிவுக்கு ஆளுங்கட்சியிலேயே எதிர்ப்பு கிளம்பியதால் அவசர நிலை கைவிடப்பட்டது. எனினும், ஜனாதிபதி பதவி விலகக் கோரி நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்றது. இதனால் அங்கு 2ஆவது முறையாக ஜனாதிபதிக்கு எதிரான பதவிநீக்க தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து, ஜனாதிபதி யூன் சுக்-இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

மேலும், இடைக்கால ஜனாதிபதியாக, பிரதமர் ஹான் டக்-சூவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி யூன் சுக் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தலைநகர் சியோலில் பொதுமக்கள் கொண்டாடியுள்ளனர்.

மயோட்டே

மயோட்டே தீவில் புயல்:

# 11 பேர் பலி; 200 பேர் படுகாயம்

இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள மயோட்டே தீவை, ஞாயிற்றுக்கிழமை(15) ‘சிண்டோ’ என்ற புயல் தாக்கியது.

கனமழையுடன் வீசிய இந்தப் புயலால், பல வீடுகள் சேதமடைந்தன.

மின்கம்பங்கள், சாலைகள், கட்டிடங்கள் உட்பட பல்வேறு உள்கட்டமைப்புகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இந்தப் புயலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர் என்றும் 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்றும் முதல் கட்ட தகவல் வெளியானது.

புயல் தாக்கிய மயோட்டே தீவுக்குத் தேவையான நிவாரண உதவிகளை, பிரான்ஸ் அரசு துரிதப்படுத்தியுள்ளது. மீட்புப்பணியில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அவுஸ்திரேலியாக்கெதிரான

# மூன்றாவது டெஸ்டில் தடுமாறும் இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் இந்தியா தடுமாறுகிறது.




ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில் பிறிஸ்பேணில் சனிக்கிழமை (14) ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 405 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ், ஆகாஷ் டீப்பிடம் எஞ்சிய விக்கெட்டுகளை இழந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 445 ஓட்டங்களைப் பெற்றது. அலெக்ஸ் காரி 70 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி, மழையால் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட நாளில் மிற்செல் ஸ்டார்க் (2), ஜொஷ் ஹேசில்வூட், அணித்தலைவர் பற் கமின்ஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து மூன்றாம் நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் லோகேஷ் ராகுல் 33 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் றோஹித் ஷர்மா ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

முதலாவது போட்டியில்

# மேற்கிந்தியத் தீவுகளை வென்ற பங்களாதேஷ்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், சென். வின்சென்டில் திங்கட்கிழமை(16) நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது.




ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே.தீவுகள்

பங்களாதேஷ்: 147/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: சௌமியா சர்கார் 43 (32), ஷமிம் ஹொஸைன் 27 (13), ஜாகிர் அலி 27 (27), மஹெடி ஹஸன் ஆ.இ 26 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகீல் ஹொஸைன் 2/13 [4], ஒபெட் மக்கோய் 2/30 [4], றொஸ்டன் சேஸ் 1/29 [4], அல்ஸாரி ஜோசப் 0/26 [4])

மே. தீவுகள்: 140/10 (19.5 ஓவ.) (துடுப்பாட்டம்: றொவ்மன் பவல் 60 (35), றொமாறியோ ஷெப்பர்ட் 22(17), ஜோன்ஸன் சார்ள்ஸ் 20 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: மஹெடி ஹஸன் 4/13 [4], ஹஸன் மஹ்மூட் 2/18 [3.5], தஸ்கின் அஹ்மட் 2/28 [4], ரிஷாட் ஹொஸைன் 1/32 [4])

போட்டியின் நாயகன்: மஹெடி ஹஸன்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது நாளை அதிகாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# லெகனிஸிடம் தோற்ற பார்சிலோனா



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் திங்கட்கிழமை (16) நடைபெற்ற லெகனிஸுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்றது. லெகனிஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை சேர்ஜியோ கொன்ஸலேஸ் பெற்றார்.

இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

# வெற்றியை நோக்கி நியூசிலாந்து



இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் வெற்றியை நோக்கி நியூசிலாந்து பயணிக்கிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்ற இங்கிலாந்து தொடரை ஏற்கெனவே கைப்பற்றிய நிலையில், ஹமில்டனில் சனிக்கிழமை(14) ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளைப் பெற்றவாறு ஆரம்பித்த நியூசிலாந்து கேன் வில்லியம்சனின் 156, டரைல் மிற்செல்லின் 60, மிற்செல் சான்ட்னெரின் 49, றஷின் றவீந்திரவின் 44, டொம் பிளென்டலின் ஆட்டமிழக்காத 44 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து, 453 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜேக்கப் பெத்தெல் 3, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 2, ஷொய்ப் பஷிர் 2 மற்றும் குஸ் அட்கின்ஸன், ஜோ றூட், மத்தியூ பொட்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 658 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, டிம் செளதி, மற் ஹென்றியிடம் பென் டக்கெட், ஸக் குறோலியை இழந்து மூன்றாம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பெத்தெல் ஒன்பது ஓட்டங்களுடனும், றூட் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காது களத்திலுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 17, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.